**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண்.168/2018**
**நாள் : 20/07/2022, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - குமார் | த/பெயர் - நரசிம்மன் |
| வயது - 42 | தொழில் - |
| விலாசம் - எண்.4, யுனைடட் காலனி, 2வது குறுக்கு தெரு, கொளத்தூர், சென்னை - 99. | |

**முதல் விசாரணை (PW1)**

நான் வழக்கின் வாதி. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 11/02/2004 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17/09/2001 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதவரம் நகர நிலவரித் திட்டம் தொடர்பான தனி வட்டாட்சியரின் கடிதம் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரசு வழிகாட்டி மதிப்பு வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**